Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 112 /2023

## Deposition of P.W.5

| | | |
|---|---|---|
| Name | : | ராமசுப்பிரமணியன் |
| Father's Name | : | குமரேசன் |
| Village | : | கூழையான்விடுதி |
| Religion | : | இந்து |
| Age | : | **24/2024** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 18.06.2024**
(3,4 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். 1,2,5 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2,5 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல்விசாரணை</u>**

நான் கூழையான்விடுதி கிராமத்தில் வசித்து வருகிறேன். தற்போது சென்னையில் தனியார் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியவற்றில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். கடந்த **2022** ஆம் வருடம் நவம்பர் மாதம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. ஒருநாள் காலை சுமார் **9.00-9.30** மணிப்போல எனது ஊருக்கு செல்வதற்காக நானும் என் நண்பர் சரத்குமார் என்பரும் இச்சடி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது போலிசார் இரண்டு கார்களை நிறுத்தி விசாரித்து கொண்டிருந்தார்கள். அங்கு கூட்டமாக இருந்தது. நானும் என் நண்பர் சரத்குமாரும் அங்கு சென்று பார்த்தோம். அங்கு மொத்தம் **5** நபர்கள் இருந்தார்கள். அங்கு சுவிட் டிசையர் காரும் யுனோவா காரும் நின்று கொண்டிருந்தது. அந்த **5** நபர்களிடம் சம்மட்டிவிடுதி போலிசார் விசாரித்தார்கள். அந்த **5** நபர்களில் **2** நபர்களின் பெயர்கள் மட்டும் எனக்கு தற்போது ஞாபகத்தில் உள்ளது. அது அய்யப்பன், குமார் என்ற பெயர்கள் ஆகும்.

**2.** அதில் அய்யப்பன் என்பவரை போலிசார் விசாரித்தபோது அவர் வம்பன், மாங்காடு, சேந்தாங்குடி, கூழையான்விடுதி ஆகிய பகுதிகளில் உள்ள ஆடுகளை நாங்கள்தான் காரில் சென்று திருடியதாக ஒப்புக்கொண்டார். எதிரி அய்யப்பன் சொன்ன வாக்குமூலத்தை போலிசார் டைப் செய்து அருகில் சென்று பிரிண்ட் எடுத்து வந்து கையொப்பம் கேட்டார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், என் நண்பர் சரத்குமாரும் கையொப்பம் செய்தோம். அதன் பிறகு எங்களை எதிரி அய்யப்பன் என்பவரது ஊரான முள்ளிக்காப்பட்டி என்ற ஊருக்கு

அழைத்து சென்று எதிரி அய்யப்பன் வீட்டில் உள்ள தொழுவத்தில் கட்டி வைத்திருந்த **46-48** ஆடுகளை போலிசார் கைப்பற்றினார்கள். அந்த இரண்டு கார்களையும் போலிசார் பறிமுதல் செய்தார்கள். சுவிட் காரின் பதிவு எண். **TN 07 2696** மற்றும் யுனோவா காரின் பதிவு எண். **TN 10 3137** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் என் நண்பர் சரத்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி அய்யப்பன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை நகலில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **24.11.2022** தேதியிட்ட கைப்பற்றுதல் மகஜரின் உண்மை நகலில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.**4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவத்தின்போது போலிசார் விசாரித்த **5** நபர்களையும் என்னால் நேரில் பார்த்தால்அடையாளம் காட்ட முடியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள **2** எதிரிகளும் **(3** வது எதிரி குமார், **4** வது எதிரி ராமராஜ்**)** நான் சம்பவத்தின்போது பார்த்த நபர்கள்தான். போலீசார் என்னை விசாரித்தனர். நடந்த விபரம் கூறினேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நானும் என் நண்பர் சரத்குமாரும் காலை 9.00 மணிக்கு இச்சடி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தோம் என்ற விவரத்தை போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இரண்டுகார்களில் 5 நபர்கள் வந்தார்கள் என்ற விவரத்தையும் போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளில் எந்தெந்த எதிரிகள் எந்தெந்த காரில் வந்தார்கள் என்று நான் பார்த்தேனா என்றால் இல்லை. அந்த 5 நபர்களும் காரிலிருந்து இறங்கித்தான் நின்றார்கள். எதிரி கொடுத்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தை டைப் செய்த பின்னர் எந்த கடைக்கு எடுத்து சென்று பிரிண்ட் எடுத்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியாது. டைப் செய்து எடுத்து சென்று பிரிண்ட் மட்டும் எடுத்து வந்தார்கள். டைப் செய்து எங்களிடம் கையொப்பம் வாங்கிய ஆவணத்தில் என்ன டைப் செய்யப்பட்டிருந்தது என்று நான் படித்து பார்க்கவில்லை என்றால் நடந்ததை எழுதியிருந்தார்கள். அதில் எதிரிகள் இரண்டு வாகனங்களில் வந்தார்கள் என்ற விவரமும் இருந்தது என்றால் சரிதான்.

2. எதிரிகளை கைது செய்ததாக கூறப்படும் இடத்திலிருந்து ஆடுகளை கைப்பற்றியதாக கூறப்படும் இடம் எவ்வளவு தொலைவில் இருந்தது என்றால் சுமார் 20 கி.மீ. தொலைவில் இருந்தது. சம்பவ இடத்திலிருந்து காலை சுமார் 10-11 மணிக்கு கிளம்பி ஆடு கைப்பற்றதாக கூறப்படும் இடத்திற்கு சுமார் 1 மணி நேரத்தில் சென்றோம் என்றால் சரிதான். ஆடுகளை போலிசார் கைப்பற்றும்போது அதில் எத்தனை பெண் ஆடுகள், எத்தனை கிடா ஆடுகள் என போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எழுதப்பட்ட

ஆவணத்திலும் நாங்கள் கையொப்பம் செய்து கொடுத்தோம். அதன்பின்னர் மதியம் சுமார் 12.00 மணிக்கு சம்மட்டிவிடுதி காவல்நிலையத்திற்கு வந்திருப்போம் என்றால் சரிதான். அங்கு வைத்தும் 2,3 சாட்சி கையொப்பங்களை போலிசார் வாங்கி கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த கையொப்பங்கள்தான் என்னிடம் காட்டிய கையொப்பம் என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் சொன்னதுபோல் இச்சடி பேருந்து நிறுத்தத்திற்கு வரவில்லை என்றாலும், முதல் விசாரணையில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் சரியல்ல. சொன்ன நாள், நேரம், இடத்தில் வைத்து போலிசார் எதிரிகளை கைது செய்யவில்லை என்றாலும் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து கார்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், சொன்ன நாள்,நேரம், இடத்தில் வைத்து எங்கள் முன்னிலையில் ஆடுகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>ம.வி.இல்லை</u>